அசல் வழக்கு எண். 58/2020 வா.சா.2 ஆறுமுகம் த/பெ கண்ணு கவுண்டர்

**05.02.2024 1 முதல் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆகாரத்தில் சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் 5 ஏக்கர் நிலம் உள்ளது. அதன் சர்வே நெம்பர் 241/2 மற்றும் அதன் உட்பிரிவுகள் கொண்டதாகும். உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே நெம்பர்கள் என்னால் துல்லியமாக சொல்ல முடியுமா என்றால் தற்போது முடியாது. நான் என் ஊரில் முன்னால் தலைவராக இருந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வாதி நீலகண்டன் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்தில் சர்வே நெம்பர் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே நெம்பர் தெரியாது. விஸ்தீரணம் 2 ஏக்கர் ஆகும். வழக்கு சொத்தின் ஜக்பந்தி தெரியுமா என்றால் தெரியும். மேற்கில் சின்னபையன் நிலம், வடக்கில் மாரி நிலம், கிழக்கில் முனுசாமி நிலம், தெற்கில் இளங்கோ நிலம் உள்ளது. 2ஏக்கருக்கான ஜக்பந்தி இதுஎன்றால் சரிதான்.

3. எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் உள்ளது. 8ம் வகுப்பு வரை அந்த பள்ளிக்கூடத்தில் நடத்தப்படுகிறது. வாதி நீலகண்டன் எங்கள் ஊரில்உள்ள பள்ளிக்கூடத்தில் தான் படித்தார் என்றால் சரிதான். எந்த வகுப்பு வரை அந்த பள்ளி கூடத்தில் வாதி படித்தார் என்றால் பள்ளியில் படித்தது தெரியும் எந்த வகுப்பு வரை என்று தெரியாது. வாதி சிறு வயதில் எங்கள் ஊரை சேர்ந்த ராஜகுமாரி என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு சென்றுவிட்டார் என்றால் ஊரில்தான் அவரது மாமியார் வீடு உள்ளது. ஆனால் வேலை சம்மந்தமாக குடும்பத்துடன் சென்னை சென்றுவிட்டார். வாதி அவரது பெற்றோருக்கு தெரியாமல் திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் அன்றிலிருந்து தன் பெற்றோரை பிரிந்து தான் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். வாதி திருமணம் செய்து கொண்ட ராஜகுமாரி என்பவருக்கு நான் சிறிய பாட்டனார் உறவு முறை என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி பூபதி என்பவரால் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் என்னை தவிர்த்து துரைசாமி மற்றும் கன்னியப்பன் கையெழுத்து செய்துள்ளார்கள். சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி பூபதியின் குடும்ப சொத்து என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு இருந்த குடும்ப சொத்து என்னவென்றால் மொத்தம் 4 1/2 ஏக்கர் ஆகும். அதில் பூபதிக்கு 1 1/2 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. ஆடு விற்றுதான் 1ம் பிரதிவாதி பூபதி 2ஏக்கர் சொத்தை வாங்கினார்.

6. வழக்கு சொத்திற்கும் வாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சிறு வயதிலேயே வாதி குடும்ப சொத்தை விட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றும் வழக்கு சொத்தானது 1ம் பிரதிவாதியின் சொத்து என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும் வாதி திருமணம் செய்து கொண்ட பெண் என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.